**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**அசல் வழக்கு எண். 104/2020**
**நாள் 14/03/2025 வெள்ளிக்கிழமை**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பின் 1–வது சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10–வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் – பக்தவச்சலம் | த/பெயர் – சேஷமநாயுடு |
| வயது – 74 | தொழில் – |
| விலாசம் – குமரசிரளபாக்கம் | |

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

நான் இந்த வழக்கை எனது நிலத்தை கேட்டு தாக்கல் செய்துள்ளேன். அந்த நிலம் சிருளப்பாக்கத்தில் உள்ளது, அந்த நிலத்தை எனது தந்தை எனக்கு கொடுத்தார். எனது தந்தை சேசமநாயுடுக்கு பாகத்தில் கிடைத்த நிலமாகும். அந்த பாகப்பிரிவினை 18.08.1994ல் ஏற்ப்பட்டது என்றால் தேதி தெரியாது. அந்த பாகப்பத்திரத்தின் அசல் 2ம் பிரதிவாதியிடம் ஒப்படைக்கப்பட்டது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியானவர் 2ம் பிரதிவாதியின் மகன் ஆவார். எனக்கும் 2ம் பிரதிவாதிக்கு இடையே தான் ஒப்பந்தம் ஏற்ப்பட்டது. நான் இந்த வழக்கில் 1ம் பிரதிவாதியை தேவையில்லாமல் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல.

**குறுக்குவிசாரணைக்காக வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பொன்னேரி**